# சீர்படுத்தப்பட்ட சாலைகள் ஸ்தாப்பாக் மக்கள் மகிழ்ச்சி

கோலாலம்பூர், பிப்.5- சீனப்புத்தாண்டுக்கு முன்பாகவே ஸ்தாப்பாக்கில் உள்ள ஆறு சாலைகள் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தால் சீரமைக்கப்பட்டது.

இதனால் ஸ்தாப்பாக் வட்டார மக்கள் மகிழ்ச்சி கொண்டிருந்தனர் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர் ஹென்றி லாய் விவரித்தார்.

ஜாலான் செமராக் அபி, ஜாலான் ஹாஜி பாலில், ஜாலான் சொங் ஹுவா, ஜாலான் லங்காவி, ஜாலான் கம்போங் ஹாஜி இட்ரிஸ், ஜாலான் கெம்பாஸ் ஆகிய சாலைகள் சீரமைக்கப்பட்ட ஒன்று.

ஏற்கெனவே குண்டும் குழியுமாக இருந்த சாலைகள் எல்லாம் மறுவடிவம் பெற்றது மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி தரும் ஒன்று.



பக்கத்து குடியிருப்பு பகுதிக்கு அதாவது சுற்றுவட்டார பகுதிகளுக்கு போவதற்கான வழிதடத்தை இது ஏற்படுத்தித் தருகிறது.

ஜாலான் சொங் ஹுவா மற்றும் ஜாலான் லங்காவியை மறுவடிவம் செய்யக்கூடிய ஆலோசனை 2020ஆம் ஆண்டில் முன்மொழியப் பட்டது. எனினும் சாலையில் வேறு பல மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததால் இத்தகைய திட்டம் கடந்தாண்டு இறுதிவரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

ஜாலான் லங்காவி மறு சீரமைப்புப் பணியானது 900 மீட்டர் தூரம் மேற்கொள்ளப்பட்டது.

மற்ற சாலைகளின் பணியின் தூர அளவு 200 மீட்டருக்கும் 300 மீட்டருக்கும் இடைப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் ஆலோசனை வாரிய உறுப்பினர் ஹென்றி லாய் ஒரு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இத்தகைய பணிகளுக்காக ஏற்பட்ட செலவினம் 3 லட்சம் வெள்ளி ஆகும்.

பொதுமக்கள் தந்த புகாரின் பேரில் ஜாலான் லங்காவி மேம்படுத்தப்படும் என்று அறிவிப்பு வெளியாகியது. ஜாலான் லங்காவியில் கனரக வாகனங்கள் பயன்படுத்தும் சாலை.

இதனால் இப்பகுதியி லுள்ள சாலைகள் பெருமள வில் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது இச்சாலை மேம்படுத்தப்பட்டதால் குடியிருப்பாளர்கள் சுமுகமான பயணத்தை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.